# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.394/மா/2025
நாள் 17.02.2026

ஏ. செல்வராஜ் என்கிற RTI செல்வம்
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 12
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர் மனுதாரர்

சென்னை, கொருக்குபேட்டை, கோவிந்தசாமி நகர், வ.உ.சி. தெரு, கதவு எண் 32/33 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஏ.செல்வராஜ் என்பவரின் 09.12.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.12.2024 அன்று பெறப்பட்டு 394/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, கொருக்குபேட்டை, கோவிந்தசாமி நகர், வ.உ.சி. தெரு, கதவு எண் 32/33 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஏ.செல்வராஜ் என்பவர் 09.12.2024 நாளிட்ட தனது மனுவில் இணைத்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5–ன் மண்டல அலுவலருக்கு முகவரியிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"மண்டலம் 5, பெருநகர சென்னை மாநகராட்சி பழைய வண்ணாரப்பேட்டை மூலக்கொத்தளம் மயான பூமி உதவியாளராக பணிபுரியும் திரு. மோகன் மற்றும் மயான அமைத்திருக்கும் கோட்டம் 53–ன் சுகாதார ஆய்வாளர் திரு. முகமது இக்பால் ஆகியோர் தலைமையில் அரசு பணிக்கு எதிராகவும், சென்னை மூலகொத்தளம் முழுவதும் ஆக்கிரமிப்புக்கு உறுதுணையாகவும், அரசு துறைக்கு எதிராகவும் சென்னை சுகாதார நல அலுவலகத்தில் பணிபுரியும் நபர்களை குறிப்பாக சென்னை மூலக் கொத்தளத்தில் இடுகாட்டில் பணிபுரியும் சென்னை மாநகராட்சி ஊழியர்கள் சிலர் பணிகளை செய்யாமல் இருப்பதை அறிந்தும் இவர்களுக்கு உறுதுணையாக அருகாமையில் உள்ள முகில், அஜித், மோகன், மதன்குமார், என சிலரை அமைத்து இந்து மயான பூமியில் மதமாற்றம் கிறிஸ்தவர்கள் மதத்தைச் சார்ந்தவர்களை புதைப்பதும், சென்னை மாநகராட்சியில் பணிபுரியாத நபர்கள் இவர்கள் ஆவார்கள்.

இவர்கள் அத்துமீறி இடுகாட்டில் உள்ளே மரணம் அடைந்து புதைக்க வரும் உறவினரிடம் அதிக அளவில் பணம் பறிப்பது, சென்னை மாநகராட்சி ஊழியர் என்று ஆள் மாற்றம் செய்து வருகிறார்கள். அதேபோல் சென்னை மாநகராட்சியில் 2016 ஆம் ஆண்டு 15 மண்டலத்திலும் சமாதி அமைக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் சென்னை மூலக்கொத்தளத்தில் இரவு நேரங்களில் மூலக்கொத்தளம் இடுகாட்டின் உதவியாளர்

மோகன், சுகாதார ஆய்வாளர் முகமது இக்பால், இவர்கள் தலைமையில் முகில், அஜித், மோகன், மதன்குமார், மோகன் என்ற நபர்கள் இரவு நேரங்களில் கள்ளத்தனமாக சமாதி அமைத்து உறவினரிடம் 30 ஆயிரத்திலிருந்து ஒரு லட்சம் வரை கப்பம் பட்டி வருகிறார்கள். இதனால் சென்னை மாநகராட்சிக்கு தொடர்ந்து அவப் பெயரும் நிகழ்ந்து வருகிறது. இதன் தொடர்பாக கடந்த 25/04/2024 அன்று முறையாக மண்டலம் 5 ல் புகாரளித்திருந்தேன்.

ஆனால் தாங்கள் தரப்பிலிருந்து எனது மனுவை திசை திருப்பும் நோக்கில் அதுபோன்று எதுவும் நடைபெறவில்லை என்று தெரிவித்து உள்ளீர். இதன் சம்பந்தமாக தொடர்ந்து மூலக்கொத்தளத்தில் இடுகாட்டில் நடைபெற்று வரும் ஆள் மாறாட்டம் நபர்களும் இந்த மனுவில் குறிப்பிட்டுள்ளேன். சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் நபர்கள் வயது முதியவர்கள் என்றும் அவர்களால் பணியினை செய்ய முடியாத நபர்கள் என்றும் அறிந்தேன். அவர்களை ஏன் பணியிட நீக்கம் செய்யவில்லை? ஆள் மாறாட்டம் நபர்களால் தொடர்ந்து சென்னை மூலக்கொத்தளம் சுற்றியுள்ள மக்களுக்கு பாதிப்பும் ஏற்பட்டு வருகிறது. இதனால் சென்னை மாநகராட்சி மீதும் அவப்பெயர் நிகழ்ந்து வருகிறது இவை ஒருபுறம் இருக்க 26 ஏக்கர் கொண்ட மூலக்கொத்தளம் இடுகாட்டில் தற்போது 16 ஏக்கர் நிலமாக உள்ளது மீதி உள்ள இடங்களை மூலக்கொத்தளம் மயான பூமியின் உதவியாளர் திரு. மோகன் அவர்களும் மற்றும் மயான அமைந்திருக்கும் கோட்டம் 53ன் சுகாதார ஆய்வாளர் திரு. முகமது இக்பால் அவர்கள் தலைமையில் ஆக்கிரமிப்பாளர் குறிப்பாக சென்னை மூலக்கொத்தளத்தில் சென்னை மாநகராட்சி ஊழியர் என்று பொதுமக்களை அச்சுறுத்தி வரும் முகில், அஜித், மோகன், மதன்குமார் இவர்கள் தலைமையில் மயான பூமி ஆக்கிரமிப்பு ஈடுபட்டு உள்ளனர் மற்றும் உறுதுணையாக செயல்பட்டுள்ளனர்.

அதேபோல் அருகாமையில் உள்ள சென்னை மாநகராட்சி மூலமாக உரிமம் வழங்கியதாக கூறப்பட்டு குத்துச்சண்டை பயிற்சி நிலையம் அமைத்துள்ளனர். சிலர் குறிப்பாக சாணி குளம் ராஜ்குமார், மூலகொத்தளம் உதயா, ஆக்கிரமிப்பு ஈடுபட முகமது இக்பால் அவர்களுக்கும் மோகன் அவர்களுக்கும் உறுதுணையாக செயல்பட்டதாக தகவல் எழுந்து வருகிறது. இவை ஒருபுறம் இருக்க கால்பந்து உள்விளையாட்டு அரங்கம் என்று சிலர் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மூலக்கொத்தளம் இடுகாட்டை ஆக்கிரமித்து உள்ளனர். இவை அனைத்துக்கும் முகமது இக்பால், மயான உதவியாளர் மோகன், சென்னை மாநகராட்சி மூலக் கொத்தளம் இடுகாட்டில் அத்துமீறி சமாதி அமைப்பது, பொதுமக்களை மிரட்டி பணம் பறிப்பது, தொடர்ந்து ஈடுபட்டு வரும் மோகன், முகின், அஜித், மதன்குமார் ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று புகார் அளித்திருந்தேன். ஆனால் தற்போது மண்டலம் 5, பேசின் பாலம் அலுவலகத்தில் மண்டலநல அலுவலர் மாநகராட்சியில் அத்துமீறி பொதுமக்களை வஞ்சித்து வருவது தொடர்பான நபர்களுக்கு ஆதரவாக தங்கள் தரப்பிலிருந்து மனுவின் தொடர்பாக 21/06/24 வாயிலாக தாங்களுக்கு நினைவூட்டல் கடிதம்.

1) முன்னுதாரராகிய நான் மேலே காணும் முகவரியில் நிரந்தரமாக / தற்காலிகமாக (வாடகைக்கு) குடியிருந்து வருகிறேன். நான் சாதாரண கூலி வேலை செய்து ஜீவனம் செய்து வருகிறேன். எனது கோரிக்கை மனுவினை கடந்த 25.04.2024 தேதியன்று அனுப்பி இன்றுடன் 6 மாதம் முடிவடைந்து விட்டது. நாளது 25.04.2024–ல் இருந்து 21.06.2024 தேதி வரை எனது கோரிக்கை அரசால் நிறைவேற்றுகை செய்யப்படவில்லை. எனது மனுவை திசைத் திருப்பும் நோக்கில் இது தமிழ்நாடு அரசாணை எண் 73/2018 நாள் 11.06.2018 இல் கண்டுள்ள நெறிகளின்படி குற்றமுறு நடவடிக்கையாக கருதப்படுகிறது. மேலும் மேற்காணும் அரசாணை விதிகளுக்கு ஆதரவாக ஒவ்வொரு அரசு அலுவலகங்களும் பொதுமக்களிடம் பெறுகின்ற கோரிக்கை மனுவினை 30 தினங்களுக்குள் நிறைவேற்றுகை செய்ய வேண்டும் என்பதை உறுதி படுத்தி சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு எண். W.P. No.20452/2014 and M.P. No.1/2014 நாள் 01.08.2014 என்ற வழக்கு தீர்ப்புரையில் உறுதி செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்காணும் அரசாணை மற்றும் தீர்ப்பு ஆகியவை

எனது இந்த கோரிக்கை மனுவுக்கும் இந்திய அரசியல் அமைப்பு சட்டம் 1950 இன் 14 வது பிரிவுப்படி பொருந்தும் என மனுதாரராகிய என்னால் கருதப்பட்டு நீதிமன்ற சாசனமாம் இந்திய சாட்சிய சட்டம் 1872 இன் 159 வது பிரிவுப்படி நினைவூட்டும் முகமாக தங்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

2) இந்த நினைவூட்டும் விண்ணப்பம் தங்களுக்கு கிடைத்த 07 தினங்களுக்குள் எனது கோரிக்கையை நிறைவேற்றுகை செய்ய தவறும் பட்சத்திலும் அல்லது பதில் வழங்க தவறினாலும் தங்களின் பதில் எனக்கு திருப்தி அளிக்க வில்லை என்றாலும் நீங்கள் உங்களின் கடமையை செய்ய தவறியுள்ளீர்கள் என மனுதாரராகிய என்னால் கருதப்பட்டு நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ள இதுவே ஆவணமாகிவிடும் என்பதையும், அதற்காகும் வேலையிழப்பு / வீண் செலவினங்கள் / வருமான இழப்பு / மன உளைச்சல் ஆகியவற்றுக்கு தாங்களே தார்மீக பொறுப்பு ஏற்க நேரிடும் என்பதையும் இதன் மூலம் நினைவூட்டப்படுகிறது.

3) சென்னை மூலக்கொத்தளம் இடுகாட்டில் சென்னை மாநகராட்சி ஊழியர் என்று ஆள்மாறாட்டம் செய்து வரும் மோகன், முகின், அஜித், மதன்குமார் ஆகியோரை சென்னை மாநகராட்சி மூலக்கொத்தளம் இடுகாட்டில் அத்துமீறி உள்ளே நுழைந்தாலும் அல்லது இடுகாட்டில் பணி செய்தாலும் அல்லது வேறொருவரை வைத்து பணி செய்தாலும் இவர்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அத்துமீறி நுழைந்தால் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆக்கிரமிப்புக்கு உறுதுணையாக இருந்த முகமது இக்பால், மயான உதவியாளர் மோகன் மீதும் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் மீறும் பட்சத்தில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் சட்டப்படி சென்னை மாநகராட்சி மண்டலம் நல அலுவலர், மண்டலம் அலுவலர், இடுகாடு உதவியாளர் மோகன் சுகாதார ஆய்வாளர் முகமது இக்பால் மீது சட்டப்படி வழக்கு தொடர நேரிடும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 03.06.2025 நாளிட்ட கடிதம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் சுகாதார ஆய்வாளரின் 28.06.2025 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"மனுதாரர் சமூக ஆர்வலர் RTI செல்வம், சென்னை–21 அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி பழைய வண்ணாரப்பேட்டை மூலக்கொத்தளம் மயான பூமி உதவியாளராக பணிபுரியும் திரு. மோகன் மற்றும் சுகாதார ஆய்வாளர் திரு முகமது இக்பால் ஆகியோர் தலைமையில் அரசு துறைக்கு எதிராகவும், சென்னை சுகாதார அலுவலகத்தில் பணிபுரியும் மூலக்கொத்தளம் இடுகாட்டில் பணிபுரியும் சென்னை மாநகராட்சி ஊழியர்கள் சிலர் பணிகளை செய்யாமல் இருப்பதை அறிந்தும் இவர்களுக்கு உறுதுணையாகவும் மூலக்கொத்தளம் மயான பூமிக்கு அருகாமையில் வசிக்கும் முகில், அஜித், மோகன், மதன்குமார் போன்ற நபர்களை வைத்து இந்த மயான பூமியில் மதமாற்றம் மேற்கொள்வதாகவும், ஈடுகாட்டில் மரணம் அடைந்து புதைக்க வரும் உறவினர்களிடம் அதிக அளவில் பணம் பறிப்பது, சென்னை மாநகராட்சி ஊழியர் என்று ஆள்மாற்றம் செய்வதும், சென்னை மாநகராட்சி–15 மண்டலங்களிலும் உள்ள மயான பூமிகளில் சமாதி அமைக்க தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், மூலக்கொத்தளம் மயான பூமியில் உதவியாளர் மோகன், சுகாதார ஆய்வாளர் முகமது இக்பால் வெளிநபர்களை கொண்டு இரவு நேரங்களில் கள்ளத்தனமாக சமாதி அமைத்து உறவினர்களிடம் பணம் பெறுவதாகவும், இதனால் சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுவது போன்ற நிகழ்வுகள் தொடர்பாக 25.04.2024 அன்று மண்டலம்–5 அலுவலகத்தில் புகார் அளித்ததாகவும், அதற்கு மண்டலம்–5 அலுவலகத்தில் இருந்து இம்மனுவை திசை திருப்பும் நோக்கில் மேற்கண்ட நிகழ்வுகள் ஏதும் நடைபெறவில்லை என மனுதாரருக்கு

பதில் தெரிவிக்கப்பட்டதாகவும், மூலக்கொத்தளம் மயான பூமியில் பணிபுரிந்து வரும் நபர்கள் வயது முதியவர்களாக இருந்தும் ஏன் அவர்கள் பணியிடை நீக்கம் செய்யவில்லை எனவும் மூலக்கொத்தளம் மயான பூமியில் குத்துச்சண்டை பயிற்சி நிலையம், கால் பந்து உள்விளையாட்டு அரங்கம், ஆக்கிரமிப்புகள் சமாதிகள் அமைவதற்கு மயான உதவியாளர் மோகன் மற்றும் சுகாதார ஆய்வாளர் முகமது இக்பால் ஆகியோர் உறுதுணையாக இருந்ததாகவும், மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5 பழைய வண்ணாரப்பேட்டை மூலக்கொத்தளம் மயான பூமி அமைந்துள்ள கோட்டம்–53க்கு பணிமாற்றம் அடிப்படையில் சுகாதார ஆய்வாளராக நான் பணிபுரிய பணி ஆணை வழங்கப்பட்டு, 07.06.2023 முதல் 23.03.2025 வரை பணிபுரிந்து பின்னர், பொது பணி மாறுதல் காரணமாக 24.03.2025 அன்று முதல் மண்டலம்–4 அலுவலகத்தில் பணியில் சேர்ந்து தற்போது பணிபுரிந்து வருகிறேன்.

சென்னை மாநகராட்சி மன்ற தீர்மானம் எண் 775/98 பொருள் 38–ன் படி சென்னை மாநகராட்சி பராமரிப்பில் உள்ள மூலக்கொத்தளம் மயான பூமியில் சமாதிகள் அமைக்க தடை ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. மூலக்கொத்தளம் மயான பூமியில் சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்று சமாதிகள் அமைக்க வேண்டும். ஆனால், நான் சுகாதார ஆய்வாளராக கோட்டம்–53ல் பணிபுரிந்த காலத்தில் மூலக்கொத்தளம் மயான பூமியில் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்த இடத்தில் இறந்த நபர்களின் உறவினர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு இரவு நேரங்களில் சமூக விரோதிகள் அனுமதியின்றி சமாதிகள் கட்டும் செயல்கள் அவ்வப்போது நடைபெற்று வந்தன. பின்னர், காவல் துறை மற்றும் மாநகராட்சி பணியாளர்களை கொண்டு அனுமதியின்றி எழுப்பப்படும் சமாதிகள் இடிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான சமூக விரோத செயல்கள் தொடர்பாக பலமுறை காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டன.

மூலக்கொத்தளம் மயான பூமியில் பணிபுரிந்த மயான உதவியாளர்கள் திரு. எம். சண்முகம், திரு. எம். தயாளன், திரு. எம். நாகலிங்கம் ஆகிய மூன்று நபர்கள் உடல்ரீதியாக பணி மேற்கொள்ள முடியாத சூழல் இருந்த நிலையில், அம்மூன்று மயான உதவியாளர்களும் தங்களது பணிகளை தங்களது உறவினர்கள் மற்றும் வெளிநபர்களைக் கொண்டு பணிகளை மேற்கொண்ட நிலையில், மயான பூமிக்கு அடக்கம் செய்வதற்கு இறந்த நபரின் உறவினர்களிடம் பெரும் தொகை தர நிர்பந்தம் ஏற்படுத்துவது தொடர்பான புகார்கள் எழுந்ததை தொடர்ந்து இம்மூன்று மயான உதவியாளர்களையும் பலமுறை எச்சரித்தும், தொடர்ந்து இதுபோன்ற செயல்கள் தொடர்ந்ததால் புகார்களின் அடிப்படையிலும், பணிபுரிய இயலாத நிலையின் அடிப்படையிலும் சம்பந்தப்பட்ட மூன்று மயான உதவியாளர்களின் உடல் தகுதிக்கான மருத்துவ பரிசோதனை அறிக்கை வழங்க மருத்துவ குழுமத்திற்கு 05/02/2024 அன்று கடிதம் அனுப்பப்பட்டு, மருத்துவ அறிக்கை வரும் வரை மயான உதவியாளர்களுக்கு மயான பூமியில் பிரேதங்களை அடக்கம் செய்யும் பணி மண்டலம்–5 சுகாதாரத் துறை அலுவலக ஆணை ம.அ.5சு.து.ந.க.எண் சு2/823/2024 நாள் 27/03/2024–ன்படி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

மேலும், மூலக்கொத்தளம் மயான பூமியில் சுற்றுச்சுவர் பல இடங்களில் முற்றிலும் இடிந்து சேதமடைந்தும், மயான பூமியின் நுழைவுவாயில்களின் கதவுகள் சேதமடைந்தும், நுழைவுவாயில்கள் பல எண்ணிக்கையில் கொண்டுள்ளதாலும், மயான பூமி சுற்றியுள்ள ராமதாஸ் நகர், காத்பாடா பிரதான சாலை, பெரிய பாளையத்தமன் கோயில் தெரு, மயான பூமியின் வடக்கு திசையில் உள்ள சேதமடைந்த சுற்றுச்சுவர் முழுமையாக கட்டி முடிக்கப்படாமல் இருந்ததால் (வியாசர்பாடி – வண்ணாரப்பேட்டை இரயில்) இருப்புப் பாதை வழியாக இச்சுற்றுச்சுவர் மூலம் மயான பூமியின் அருகில் வசிக்கும் பொதுமக்களும், வெளிநபர்களும் அவ்வப்போது மயான பூமிக்குள் வந்து செல்வதும், கால்நடைகள்

கட்டுவதும், கொட்டகைகள் அமைத்து ஆக்கிரமிப்புகள் ஏற்படும் சூழ்நிலைகள் இருப்பதும் மயான பூமியில் பல குற்ற செயல்கள் நிகழ்ந்த வண்ணம் இருந்து வருகின்றது.

மேலும், இம்மயான பூமியின் பாதுகாப்பினை மேம்படுத்திட மயான பூமி நுழைவாயில்களின் எண்ணிக்கையினை முறைப்படுத்திடவும், சுற்றுச்சுவர் முறையாக அமைத்திடவும், சுழற்சி முறையில் கண்காணிப்பு பணிக்கு காவலர்களை நியமித்தடவும், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்திட நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக குறிப்பு மண்டல நல அலுவலர்–5 அவர்கள் மூலமாக வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களுக்கு ம.அ.5.சு.து. ந.க. எண் 1046/2024, 07.05.2024 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

எனவே, மனுதாரர் தெரிவித்த மூலக்கொத்தளம் மயான பூமியில் நடைபெற்றதாக கூறும் ஆள் மாறாட்டம், ஆக்கிரமிப்புகளுக்கு உறுதுணைாக செயல்பட்டது போன்ற அனைத்து புகார்களும் உண்மைக்கு மாறானதாகவும், என் மீது காழ்ப்புணர்ச்சி காரணமாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற பதிலினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. மேற்கண்ட சுகாதார ஆய்வாளரின் அறிக்கையை உரிய மண்டல அலுவலர்–5–ன் குறிப்புரையுடன் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

5. இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலரின் 09.12.2025 நாளிட்ட அறிக்கை ம.அ.5 ந.க.எண்.3679/2025–ல் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:–

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–5ல் உள்ள மூலக்கொத்தளம் மயானபூமி 24.83 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த மயான பூமியினை பராமரிக்கும் பணி பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மயானபூமி அமைந்துள்ள பகுதி தாழ்வான பகுதியாக இருப்பதால் மழைக்காலங்களில் மயானபூமியை சுற்றியுள்ள பகுதிகளில் சேகரமாகும் மழைநீர் மயானபூமி உட்பகுதியில் தேக்கமடைகிறது. தேக்கமடைந்த மழைநீரை வெளியேற்றுவதற்கு மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டு அதன் மூலம் மழைநீர் B கால்வாயின் வாயிலாக வெளியேற்றப்பட்டு வருகின்றது.

இந்த மயானபூமியை சுற்றி பொதுமக்கள் ஆக்கிரமித்து தற்காலிகமான குடியிருப்புகள் அமைத்து வசித்து வந்தார்கள். எனவே இந்த மயானபூமியில் ஒரு பகுதியாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த பொதுமக்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மூலம் அரசு ஆணையின்படி இம்மக்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டு மயானத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட குடியிருப்புகள் அகற்றி இவ்விடத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளது.

இந்த மயானபூமியை சுற்றியுள்ள பொதுமக்கள், நடுத்தர வயது நபர்கள் மற்றும் சிறுவர்கள் ரவுடியிசம் மற்றும் போதைப்பழக்கம் உட்பட தவறான செயல்களில் ஈடுபடாமல் இருக்க மயானபூமியில் எந்தவொரு ஆக்கிரமிப்புகள் ஏற்படாத வகையில் ஏற்கனவே விளையாட்டு மைதானம் என்று உள்ள இடங்களில் விளையாட்டு மைதானம் சீர் செய்யப்பட்டும், புதியதாக நூலகம் மற்றும் உடற்பயிற்சி கூடம் அமைக்கப்பட்டும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதனை மூலக்கொத்தளம் மயானபூமியை சுற்றியுள்ள அனைத்து பொதுமக்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த மயானபூமியில் இறந்தவர்களை தகனம் செய்வதற்கு இரண்டு எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், மயானபூமியில் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதற்கு வசதியாக மயானபூமியின் உட்புறத்தில் சாலைகள் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மயானபூமியின் உட்புறத்தில் சேகரமாகும் குப்பைகள் மற்றும்

இதர கழிவுகளை அகற்றும் பணி பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இந்த மயானபூமியில் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதற்கு பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மனுதாரர் குறிப்பிட்டுள்ளபடி மூலக்கொத்தளம் மயானபூமியில் வெளிநபர்களை கொண்டு மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படுவதில்லை. மேலும், சில சமூக விரோதிகளால் அனுமதியின்றி எழுப்பப்படும் சமாதிகள் காவல் துறையின் உதவியுடன் அவ்வப்போது அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

புகார்தாரர் திரு. RTI செல்வம் அவர்கள் மண்டலம் 4–ல் உள்ள பகுதியில் வசித்து வருகிறார். புகார்தாரர் மூலக்கொத்தளம் மயானபூமி தொடர்பாக தெரிவித்துள்ள புகார்கள் அனைத்தும் உண்மைக்கு மாறானதாகவும், உள்நோக்கத்துடனும் அரசுக்கு எதிராகவும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் உள்ளது. மேலும், அப்பகுதி பொதுமக்களிடையே வதந்திகள் மூலம் அமைதியின்மை ஏற்படுத்தும் வகையில் புகார்தாரர் செயல்பட்டு வருகிறார் என்பதனை இம்முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

6. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.12.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.11.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

7. மனுதாரர் மற்றும் வழக்கறிஞர் KBP விஜயபாஸ்கரன் ஆகியோர் 10.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

''பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5, உட்பட்ட பழைய வண்ணாரப்பேட்டை மூலக்கொத்தளம் மயான பூமியில் நடைபெறும் முறைகேடுகளை பின்வருமாறு தெரிவித்துக்கொள்கிறோம்:

1. மேற்கண்ட மயான பூமியானது 46 ஏக்கர் கொண்டதாகும். ஆனால், தற்போது ஆக்கிரமிப்பினால் 10 ஏக்கராக குறைந்து விட்டது.

2. அப்பகுதி தனிநபர்களால் குத்து சண்டை பயிற்சி நிலையம், கால் பந்து உள்விளையாட்டு அரங்கம் போன்றவை முறைகேடாக கட்டப்பட்டுள்ளது.

3. மயான பொறுப்பாளர்கள் வயது முதிர்ந்தவர்களாக இருப்பதால் தனிநபர்களை வைத்து தகனம் செய்கிறார்கள். இந்த தனிநபர்கள் தாங்கள் சென்னை மாநகராட்சி ஊழியர்கள் என்று ஆள்மாறாட்டம் செய்து தகனம் செய்பவர்களிடம் வலுக்கட்டாயமாக பெருந்தொகை வசூலிக்கிறார்கள்.

4. தனி நபர் ஆக்கிரமிப்பினால் அங்கு ஏற்கனவே கட்டப்பட்டு இருந்த 100 சமாதிகளை இடித்துவிட்டார்கள். இதற்கு சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலர்கள் உடந்தையாக உள்ளார்கள்.

5. சுகாதார ஆய்வாளர் திரு.மோகன் அவர்கள் தகனம் செய்பவர்களிடம் இலஞ்ச பணத்தை தனது கைபேசி எண்ணில் ஜி.பே மூலம் வசூலிக்கிறார்.

6. மயான பூமியில் பொறுப்பாளர்களுக்கு மாநகராட்சியால் எவ்வித ஐ.டி கார்டு மற்றும் சீருடை வழங்கப்படவில்லை. அதனால், தகனம் செய்பவர்களுக்கு உண்மையான மாநகராட்சி ஊழியர்களா என்பதை கண்டறிய இயலவில்லை.

7. மேற்கண்ட மயான பூமியில் சமாதி அமைக்க அங்கு பணியில் இருக்கும் தனி நபர்கள் தகனம் செய்பவர்களிடம் பணம் பெற்றுக்கொண்டு சமாதி அமைக்க அனுமதியளிக்கிறார்கள்.

8. மேற்கண்ட மயான பூமியில் தனிநபர்கள் செய்யும் முறைகேடுகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்கள் உடந்தையாக உள்ளார்கள்.

9. ஆக்கிரமிப்பு செய்ததற்கு ஏதுவாக சமாதி மேல் மண் கொட்டப்படுகிறது.

10. மயானத்திற்கு அருகே கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகள் மயானத்திலிருந்து 30 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். 30 மீட்டர் இடைவெளி விட்டு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வாங்கி விட்டு மயானத்திற்குள் உள்ளே கட்டிடம் கட்டியுள்ளார்கள்.

11. மயானத்திற்குள்ளாக வேறு எந்த கட்டிடம் கட்டுவதற்கு தடை உள்ளது.

12. மேற்கண்ட புகார்கள் குறித்து பலமுறை பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5க்கு மனு அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே, மேற்கண்ட புகார்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும் நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.''

8. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் உதவி செயற்பொறியாளர், மண்டல சுகாதார அலுவலர் (பொ) மற்றும் துப்புரவு அலுவலர் ஆகியோர் 10.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5ல் உள்ள மூலக்கொத்தளம் மயனாபூமி 24.83 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த மயான பூமியினை பராமரிக்கும் பணி பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மயான பூமி அமைந்துள்ள பகுதி தாழ்வான பகுதியாக இருப்பதால் மழைக்காலங்களில் மயான பூமியை சுற்றியுள்ள பகுதிகளில் சேகரமாகும் மழைநீர் மயான பூமி உட்பகுதியில் தேக்கமடைகிறது. தேக்கமடைந்த மழைநீரை வெளியேற்றுவதற்கு மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டு அதன் மூலம் மழைநீர் B -கால்வாயின் வாயிலாக வெளியேற்றப்பட்டு வருகின்றது.

இந்த மயான பூமியில் ஒரு பகுதியில் தற்காலிக குடியிருப்புகள் அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த பொதுமக்களுக்கு தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மூலம் அரசு ஆணையின்படி இம்மக்களுக்கு குடியிருப்புகள் கட்டிதரப்பட்டு மயானத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட குடியிருப்புகள் அகற்றப்பட்டு விட்டன.

சுமார் 12 ஆக்கிரமிப்புதாரர்களின் வீடுகளின் உண்மை தன்மை அறிய தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மேலும், இந்த மயான பூமியை சுற்றியுள்ள பொதுமக்கள், நடுத்தர வயது நபர்கள் மற்றும் சிறுவர்கள் ரவுடியிசம் மற்றும் போதைப்பழக்கம் உட்பட தவறான செயல்களில் ஈடுபடாமல் இருக்க மயானத்திற்கு வெளியே பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான ஏற்கனவே இருக்கும் விளையாட்டு மைதானம் சீர் செய்யப்பட்டும், புதியதாக நூலகம் மற்றும் உடற்பயிற்சிக்கூடம் அமைக்கப்பட்டும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த மயானபூமியில் இறந்தவர்களை தகனம் செய்வதற்கு இரண்டு எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும், மயானபூமியில் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதற்கு வசதியாக மயானபூமியின் உட்புறத்தில் சாலைகள் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இறந்தவர்களுக்கு சமாதி அமைக்க கோரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

இந்த மயானபூமியில் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதற்கு பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மனுதாரர் குறிப்பிட்டுள்ளபடி மூலக்கொத்தளம் மயானபூமியில் வெளிநபர்களை கொண்டு மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படுவதில்லை. மேலும், சில சமூக விரோதிகள் அனுமதியின்றி எழுப்பப்படும் சமாதிகள் காவல் துறையின் உதவியுடன் அவ்வப்போது அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்ற விவரத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.''

9. மனுதாரரின் மனு, மனுதாரர் மற்றும் வழக்கறிஞர் K.B.P. விஜயபாஸ்கரன் ஆகியோரின் வாக்குமூலம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் சுகாதார ஆய்வாளர் மற்றும் மண்டல அலுவலர் ஆகியோரின் அறிக்கைகள் மற்றும் உதவி செயற்பொறியாளர், மண்டல சுகாதார அலுவலர் (பொ) மற்றும் துப்புரவு அலுவலர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5, உட்பட்ட பழைய வண்ணாரப்பேட்டை மூலக்கொத்தளம் மயான பூமியானது 46 ஏக்கர் கொண்ட இடத்தில், தற்போது ஆக்கிரமிப்பினால் 10 ஏக்கராக குறைந்து விட்டது என்பதும், அப்பகுதியில் தனிநபர்களால் குத்து சண்டை பயிற்சி நிலையம், கால் பந்து உள்விளையாட்டு அரங்கம் போன்றவை முறைகேடாக கட்டப்பட்டுள்ளது என்பதும், மயான பொறுப்பாளர்கள் வயது முதிர்ந்தவர்களாக இருப்பதால் தனிநபர்களை வைத்து தகனம் செய்வதால், அத்தனிநபர்கள் தாங்கள் சென்னை மாநகராட்சி ஊழியர்கள் என ஆள்மாறாட்டம் செய்து தகனம் செய்யவும், முறைகேடாக சமாதி கட்டவும், அடக்கம் செய்பவர்களிடம் வலுக்கட்டாயமாக பெருந்தொகை வசூலிக்கிறார்கள் என்பதும், தனி நபர் ஆக்கிரமிப்பினால் அங்கு ஏற்கனவே கட்டப்பட்டு இருந்த 100 சமாதிகளை இடித்து விட்டார்கள் என்பதும், இதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உடந்தையாக உள்ளார்கள் என்பதும், மயான பூமியில் பொறுப்பாளர்களுக்கு மாநகராட்சியால் எவ்வித ஐ.டி கார்டு மற்றும் சீருடை வழங்கப்படாததால், தகனம் செய்பவர்களுக்கு உண்மையான மாநகராட்சி ஊழியர்களா என்பதை கண்டறிய இயலவில்லை என்பதும், ஆக்கிரமிப்பு செய்வதற்கு ஏதுவாக சமாதி மேல் மண் கொட்டப்படுகிறது என்பதும், மயானத்திற்கு அருகே கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகள் மயானத்திலிருந்து 30 மீட்டர் இடைவெளி விட்டு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வாங்கி விட்டு மயானத்திற்கு உள்ளே கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், இப்புகார்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும் நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் மனுதாரர் மற்றும் வழக்கறிஞர் K.B.P. விஜயபாஸ்கரன் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 5ல் உள்ள மூலக்கொத்தளத்தில் 24.83 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மயான பூமியினை பராமரிக்கும் பணி பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதும், மயான பூமி உட்பகுதியில் தேக்கமடைந்த மழைநீரை வெளியேற்றுவதற்கு மழைநீர் வடிகால்

அமைக்கப்பட்டு அதன் மூலம் மழைநீர் B-கால்வாயின் வாயிலாக வெளியேற்றப்பட்டு வருகின்றது என்பதும், இந்த மயான பூமியில் ஒரு பகுதியில் தற்காலிக குடியிருப்புகள் அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த பொதுமக்களுக்கு தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மூலம் இம்மக்களுக்கு குடியிருப்புகள் கட்டிதரப்பட்டு மயானத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட குடியிருப்புகள் அகற்றப்பட்டு விட்டன என்பதும், சுமார் 12 ஆக்கிரமிப்புதாரர்களின் வீடுகளின் உண்மை தன்மை அறிய தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், இம்மயான பூமியை சுற்றியுள்ள பொதுமக்கள், நடுத்தர வயது நபர்கள் மற்றும் சிறுவர்கள் பயன்பாட்டிற்காக மயானத்திற்கு வெளியே பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான ஏற்கனவே இருக்கும் விளையாட்டு மைதானம் சீர் செய்யப்பட்டும், புதியதாக நூலகம் மற்றும் உடற்பயிற்சிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், இந்த மயானபூமியில் இறந்தவர்களை தகனம் செய்வதற்கு இரண்டு எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்பதும், இம்மயானபூமியில் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதற்கு வசதியாக மயானபூமியின் உட்புறத்தில் சாலைகள் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது என்பதும், இறந்தவர்களுக்கு சமாதி அமைக்க கோரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்தால் அனுமதி வழங்கப்படுகிறது என்பதும், இந்த மயானபூமியில் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதற்கு பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதும், மனுதாரர் குறிப்பிட்டுள்ளபடி மூலக்கொத்தளம் மயானபூமியில் வெளிநபர்களை கொண்டு மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதும், சில சமூக விரோதிகளால் அனுமதியின்றி எழுப்பப்படும் சமாதிகள் காவல் துறையின் உதவியுடன் அவ்வப்போது அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 5–ன் சுகாதார ஆய்வாளர் மற்றும் மண்டல அலுவலர் ஆகியோரின் அறிக்கைகள் மற்றும் உதவி செயற்பொறியாளர், மண்டல சுகாதார அலுவலர் (பொ) மற்றும் துப்புரவு அலுவலர்ஆகியோரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மூலகொத்தளம் மயான பூமியில் சில சமூக விரோதிகளால் அனுமதியின்றி எழுப்பப்படும் சமாதிகள் காவல் துறையின் உதவியுடன் அவ்வப்போது அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும், அங்கு உள்ள சுமார் 12 ஆக்கிரமிப்புதாரர்களின் உண்மை தன்மையை அறிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் சுகாதார அலுவலர் (பொ) மற்றும் துப்புரவு அலுவலர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்து இருந்தாலும்,

(1) மூலகொத்தளம் மயான பூமி ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக பெறப்பட்டுள்ள புகார் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 5–க்குரிய வட்டார துணை ஆணையர் (வடக்கு) (Regional Deputy Commissioner-North) வருவாய் துறையுடன் இணைந்து அரசு ஆவணங்களின் அடிப்படையில் மேற்கண்ட மயான பூமியினை களஆய்வு செய்து, அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும்,

(2) மூலகொத்தளம் மயான பூமியில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த 100 சமாதிகள் இடிக்கப்பட்டது தொடர்பான புகார் குறித்து, மேற்கண்ட மயான பூமியில் சமாதி அமைக்கவும் / இடிக்கவும் முறையான நடைமுறைகள் கடைபிடிக்கப்பட்டதா என்பது தொடர்பாக மண்டல அலுவலர் தலைமையில் ஆய்வு மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்குமாறும்,

(3) மூலகொத்தளம் மயான பூமியில் சமூக விரோதிகளின் முறைகேடான செயல்களை காவல்துறையுடன் இணைந்து மாதம் ஒரு முறை ஆய்வு செய்யவும்,

(4) 12 ஆக்கிரமிப்புதாரர்களின் உண்மை தன்மையை அறிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்துடன் இணைந்து அவ்வாக்கிரப்புகளை விதிமுறைகளைக் கடைப்பிடித்து அகற்றுவது குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கவும்,

(5) மூலகொத்தளம் மயான பூமியில் பணிபுரியும் பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு புகைப்படத்துடன் உரிய அடையாள அட்டை வழங்கவும், மயான பூமியில் திடீர் ஆய்வு மேற்கொண்டு அங்கு பணிபுரியும் மயான ஊழியர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியால் நியமிக்கப்பட்டவர்களா என்பதை உறுதி செய்யுவும்,

(6) மயான பூமியில் தகனம் செய்வதற்கான உரிய இரசீது முறையாக வழங்கவும் உரிய அலுவலர்களை அறிவுறுத்த பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு ஏ. செல்வராஜ் என்கிற RTI செல்வம்,
கதவு எண் 32/33, வ.வ.சி. தெரு,
கோவிந்தசாமி நகர், கொருக்குப்பேட்டை,
சென்னை–600 021.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003

(3) வட்டார துணை ஆணையர் (வடக்கு),
பெருநகர சென்னை மாநகராட்சி,
62, பேசின்பாலம் சாலை,
சிதம்பரம் நகர், சென்னை–600 021.

(4) மண்டல அலுவலர், மண்டலம் 5,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 61 பேசின் பாலம் சாலை,
சென்னை 600 021.

(5) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003

<u>நகல்</u> :
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.